நகராட்சி அலுவலகம்,
புளியங்குடி,

நாள்.10.06.2022.

மன்றக்கூட்ட அறிவிப்பு

2022-ம் ஆண்டு ஜூன் மாதம் நாள்.10.06.2022, வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் நகர்மன்றக் கூடத்தில் வைத்து நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

நகர்மன்ற தலைவர்,
புளியங்குடி நகராட்சி

சாதாரண கூட்டம்

Date of Council	Decision No.	Subject in Agenda	Decision of Council
10.06.2022	34	**பொருள்.1** புளியங்குடி நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஏப்ரல் 2022ம் மாத தினசரி நாட்குறிப்பு நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. **அலுவலக குறிப்பு**. பதிவு செய்யலாம்.	அனுமதிக்கப் பட்டது.
	35	**பொருள்.2** புளியங்குடி நகராட்சி பொறியாளர் அவர்களின் ஏப்ரல் 2022ம் மாத தினசரி நாட்குறிப்பு நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. **அலுவலக குறிப்பு**.பதிவு செய்யலாம்.	அனுமதிக்கப் பட்டது.
	36	**பொருள்.3** புளியங்குடி நகராட்சி சுகாதார அலுவலர் அவர்களின் ஏப்ரல் 2022ம் மாத தினசரி நாட்குறிப்பு நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. **அலுவலக குறிப்பு**. பதிவு செய்யலாம்.	அனுமதிக்கப் பட்டது.
	37	**பொருள்.4** புளியங்குடி நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் அவர்களின் ஏப்ரல் 2022ம் மாத தினசரி நாட்குறிப்பு நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. **அலுவலக குறிப்பு**. பதிவு செய்யலாம்.	அனுமதிக்கப் பட்டது.
	38	**பொருள்.5** அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022ல் தெரிவித்துள்ள உத்தரவுகளின்படி புளியங்குடி நகராட்சியில் சொத்துவரி மற்றும் காலிமனைவரி பொதுச் சீராய்வு தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.17, நாள்.11.04.2022ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மேற்கண்ட அரசாணை மற்றும் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ள உத்தரவுகளின்படி இந்நகராட்சியில் சொத்துவரி	அனுமதிக்கப் பட்டது.

மற்றும் காலிமனைவரி பொதுச் சீராய்வு தொடர்பான அறிக்கையினை 15.05.2022ம் தேதிய தினகரன் தமிழ் நாளிதழ், மாலைமலைர் தமிழ் நாளிதழ் மற்றும் Times of India ஆங்கில நாளிதழ்களில் இவ்வறிவிக்கை தொடர்பாக 30 தினங்களுக்குள் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகளை இந்நகராட்சியில் எழுத்துபூர்வமாக தெரிவிக்கலாம் என அறிவிக்கை செய்யப்பட்டது.

மேற்கண்ட அறிவிக்கை தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட காலம் வரை எந்தவித ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் இந்நகராட்சிக்கு வரப்பெறவில்லை. எனவே ஏற்கனவே மன்றம் அனுமதித்துள்ளபடி கீழ்க்கண்டவாறு மண்டல மதிப்பு இறுதி செய்யப்பட்டு சொத்துவரி சீராய்வு தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட அரசிதழில் வெளியிடவும் மற்றும் கீழ்க்கண்டவாறு உயர்வு செய்யப்பட உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளில் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ஏற்கனவே உள்ள சொத்துவரி உயர்வு செய்யும் சதவீதம்

சொத்துவரி

வ. எண்.	தற்போதைய மண்டலம்	தற்போதைய மண்டல மதிப்பு	புதிதாக நிர்ணயிக்கப்படும் சொத்துவரிக்கான மண்டல அடிப்படை மதிப்பு			ஏற்கனவே உள்ள சொத்துவரி தொகை உயர்வு செய்யும் சதவீதம்
			பரப்பளவு (ச.அடி) / உபயோகம்	உயர்வு செய்வதற்கான காரணி	புதிய மண்டல மதிப்பு	
1	A	2.05	குடியிருப்பு			
			<=600	1.25	2.56	25%
			601-1200	1.5	3.08	50%
			1201-1800	1.75	3.59	75%
			>1801	2	4.10	100%
			வணிகம்	2	4.10	100%
			தொழிற்சாலை	1.75	3.59	75%
			சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்கள்	1.75	3.59	75%
2	B	0.60	குடியிருப்பு			
			<=600	1.25	0.75	25%

		601-1200	1.5	0.90	50%
		1201-1800	1.75	1.05	75%
		>1801	2	1.20	100%
		வணிகம்	2	1.20	100%
		தொழிற்சாலை	1.75	1.05	75%
		சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்கள்	1.75	1.05	75%
3	C	0.50 குடியிருப்பு			
		<=600	1.25	0.63	25%
		601-1200	1.5	0.75	50%
		1201-1800	1.75	0.88	75%
		>1801	2	1.00	100%
		வணிகம்	2	1.00	100%
		தொழிற்சாலை	1.75	0.88	75%
		சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்கள்	1.75	0.88	75%

காலிமனை வரி

மண்டலம்	தற்போதைய சதுரஅடிக்கான மதிப்பு	உயர்த்தப்பட்டுள்ள மதிப்பு	ஏற்கனவே உள்ள காலிமனைவரி உயர்வு செய்யும் சதவீதம்
A	0.10	0.20	100%
B	0.15	0.30	100%
C	0.20	0.40	100%

அலுவலகக்குறிப்பு.

மேற்கண்டவாறு இறுதிசெய்யப்பட்ட மண்டல மதிப்பின்படி சொத்துவரி பொதுச்சீராய்வு செய்யவும், மற்றும் சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளில் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி பொதுச் சீராய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.737/2022/அ1)

	39	**பொருள்.6** இந்நகராட்சியில் ஒப்பந்தப் பணிகள் மேற்கொண்டு 5 ஆண்டுகளுக்கு மேலாக ஒப்பந்தகாரர் உரிமம் புதுப்பிக்கப்படாமலும் தொழில்வரி செலுத்தாமலும் உள்ள கீழ்கண்ட விபரப்படியான ஒப்பந்தகாரர்களின் தொழில்வரி விதிப்பை நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.	அனுமதிக்கப் பட்டது.

வ. எண்	ஒப்பந்தகாரர் விபரம்	வரிவிதிப்பு எண்	ஆண்டு	நீக்கம் செய்வதற்கான காரணம்	தொகை
1.	T.முருகன்	142/001/00048, 142/2663	2011	மேற்படி ஆண்டு முதல் ஒப்பந்தகாரர் உரிமம் புதுப்பிக்கப்படவில்லை பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.	6260
2	C.சேம்ராஜ்	142/0026/0009, 142/619	2010		3180
3	கார்த்திகேயன்	142/0019/00021, 142/2664	2011		7170
4	G. முருகன்	142/001/00049	2021	கடையநல்லூர் நகராட்சியில் (141/006/00013 மற்றும் 141/006/00014) நடப்பு ஆண்டு வரை தொழில்வரி செலுத்தி வருகிறார்.	8750
5	G. முப்பிடாதி	142/001/00050	2021		8750
6	S. கடற்கரை	142/001/00031, 142/1007	2014	மேற்படி ஆண்டு முதல் ஒப்பந்தகாரர் உரிமம் புதுப்பிக்கப்படவில்லை பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை	4110
7	K. சாகுல் ஹமீது	142/001/00028, 142/1004	2011		4110
8	துரைச்சாமி	142/0029/00046, 142/816	2014		6260
9	G.மணி	142/001/00033, 142/1009	2013		5040
10	செய்யது இப்ராகிம் பாதுஷா	142/0012/00012, 142/2670	2014		3800
11	அசன் முகம்மது	142/0011/00018, 142/2666	2014		5040

		12	நாராயணன்	142/0014/00036, 142/246	2014	4110
		13	SUXUS Engineering (முகம்மது இப்ராகிம்)	142/001/00053	–	7500
		அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.				
	40	**பொருள்.7** புளியங்குடி நகராட்சி பகுதியிலுள்ள வார்டு எண்.8-ல் உள்ள சமுதாய நலக்கூடத்தில் மின்இணைப்பு இல்லாத காரணத்தினாலும், 18வது வார்டு வாலன் தெருவில் இயங்கி வந்த நகராட்சி பள்ளி கட்டிடம் பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளதால் மேற்படி பள்ளியினை சமுதாய நலக்கூடத்திற்கு மாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் புதியதாக மின்இணைப்பு பெறுவதற்கு மின்சார வாரியத்திற்கு தொகை ரூ.9968/- மட்டும் செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். .	அனுமதிக்கப் பட்டது.
	41	**பொருள்.8** இந்நகராட்சி பொதுப்பிரிவு ஈப்பு வாகனம் TN-79-E-3178 வாகனத்திற்கு இ-ஆயில், ஜி-ஆயில், கிரௌன் ஆயில், கூல் ஆயில், பி-ஆயில், பவர்ஸ்டெரிங் ஆயில் மாற்றுதல், கிளர்ச் கவர்செட் அசெம்பிளி மாற்றுதல், கிளர் பாட்டம், மாஸ் சிலிண்டர் மாற்றுதல், பிரேக் பேடு மாற்றுதல், கிரிஸ் பேக்கிங் செய்தல், டோர் முழுவதும் செக்கப் செய்தல், ஏசி செக்கப் செய்து பில்டர் மாற்றுதல், கம்ளீட் வாகனம் கெமிக்கல் வாஸ் செய்தல், அலையய்மெண்ட் பேலன் செக்கப் செய்தல், பம்பர் லைட் புதியது மாற்றுதல் மற்றும் ஹாரன் செக்கப் செய்தல் போன்ற பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.68000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு** : 1) மன்றம் அனுமதிக்கலாம். 2) மேற்படி பணிக்கான செலவினத்தை பொதுநிதியின் கீழ் வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0608/2022/இ2)	அனுமதிக்கப் பட்டது.
	42	**பொருள்.9** இந்நகராட்சி குடிநீர் பிரிவு டேங்கர் லாரி TN-72-W-5173 வாகனத்திற்கு ஆண்டு வரி கட்டணம் ரூ.6000/-, 1% வரி கட்டணம் ரூ.60/- மற்றும் சேவைக்கட்டணம் ரூ.10/- மொத்தம் ரூ.6070/- மட்டும மேற்படி வாகனத்திற்கு ஆண்டு வரி கட்டணம் தொகையினை சங்கரன்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் செலுத்துவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு** : 1)மன்றம் அனுமதிக்கலாம். 2)மேற்படி பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியின் கீழ் வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0630/2022/இ2)	அனுமதிக்கப் பட்டது.

		(ந.க.எண்.475/2022/எச்1)	
	43	**பொருள்.10** இந்நகராட்சி குடிநீர் பிரிவு டேங்கர் லாரி **TN-72-W-5173** வாகனத்திற்கு ஆண்டு வரி கட்டணம் பாக்கி ரூ.1069/- மட்டும் சங்கரன்கோவில் வட்டாரபோக்குவரத்து அலுவலகத்தில் இந்நகராட்சி திரு.மு.சங்கிலியாண்டி ஓட்டுநர் மூலம் தொகை செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ.1069/- மட்டும் ஓட்டுநருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு** 1) மன்றம் அனுமதிக்கலாம். 2) மேற்படி பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியின் கீழ் வழங்க மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.0629/2022/இ2)**	அனுமதிக்கப் பட்டது.
	44	**பொருள்.11** இந்நகராட்சி பொதுப்பிரிவு ஈப்பு வாகனம் **TN-79-E-3178** வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பணியின் அவசர அவசியம் கருதி சங்கரன்கோவில் ரீவிநாயகம் ஆட்டோ ஸ்டோர்ஸ் நிறுவனத்தில் பொருட்கள் வாங்கி மேற்படி ஈப்பு வாகனம் பழுதுப்பணிகள் மேற்கொண்டமைக்கு தொகை ரூ.10460/- மட்டும் வழங்கவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.	**அலுவலக குறிப்பு**
	45	**பொருள்.12** புளியங்குடி நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு தூய்ம பணியாளர்களுக்கு துப்புரவு பணிக்கு தேவையான கீழ்க்கண் தளவாட சாமான்கள் வாங்கி வழங்க உத்தேச செலவுத்தொக ரூ.4,00,000/-யை (ரூபாய் நான்கு இலட்சம் மட்டு பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனும வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.0842/2022/எச்1)**	அனுமதிக்கப் பட்டது.

வ. எண்.	தேவைப்படும் சாமான்கள் விபரம்	எண்ணம்
1	இரும்புசட்டி	50
2	மண்வெட்டி	100
3	முள்கொரடு	100
4	பெரியவாளி	50
5	சின்னவாளி	50
6	கைமாறு	100
7	கடப்பாறை	10
8	குப்பை அள்ளும் தகடு	100
9	(Comboots) கம்பூட்ஸ் காலுறை	30
10	அரிவாள்	25
11	குப்பை வாங்கும் டப்பா	200

	46	**பொருள்.13** புளியங்குடி நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவு டிப்பர் வாகனம் **TN-76-Y-0217**-க்கு தகுதிச்சான்று பெறுவதற்கு பழுதுநீக்கம் செய்யும் பணியை மேற்கொள்வதற்கு தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து **19.04.2022** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று அது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. வ. எண் — நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி 1 — ஸ்ரீமுருகா மோட்டார் ஒர்க்ஸ், கொட்டாகுளம், செங்கோட்டை தாலுகா 2 — மூஸா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், 194, செங்கோட்டை ரோடு, தென்காசி. மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் உள்ள ஸ்ரீமுருகா மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதை மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.475/2022/எச்1)**	அனுமதிக்கப் பட்டது.
	47	**பொருள்.14** மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித ந.க.எண்.சி1/2924/2021, நாள்.29.03.2022-ன்படி 15.03.2022-ல் நடைபெற்ற சாலை பாதுகாப்பு தொடர்பான ஆய்வுக்கூட்ட நடவடிக்கையில் புளியங்குடி நகராட்சி கண்ணா திரையரங்கம் முதல் புதுமார்க்கெட் வரையிலான நெடுஞ்சாலையுடன் இணையும் 11 நகராட்சி சாலைகளில் வேகத்தடை அமைக்க தெரிவித்துள்ளவாறு கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. பணியின் விபரம் — மதிப் ட்ட கண்ணா திரையரங்கம் முதல் புதுமார்க்கெட் வரையிலான நெடுஞ்சாலையுடன் இணையும் 11 நகராட்சி த்தடை அமைத்தல் பணி **அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.849/2022/இ1)**	அனுமதிக்கப் பட்டது.
	48	**பொருள்.15** புளியங்குடி நகராட்சி **2022-2023** ஆம் ஆண்டு சொத்துவரி சீராய்வு செய்வதற்கு தேவையான படிவம் விநியோகம் செய்வதற்கு தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து **26.04.2022** அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. வ. எண். — விபரங்கள் — **QTY** — **Yes Yes Associates No.16, Thamari Sala East Ext, Karur Bye P Road, Annamalai Nag Trichy-18** — — — **Rate (GST 18%)** 1 — படிவம்-1 குடியிருப்பு கட்டிடம் **(Light Blue Colour)** — **100 Forms** — **Rs.318.60**	அனுமதிக்கப் பட்டது.

		2	படிவம்-2 வணிக கட்டிடம் (Light Pink Colour)	100 Forms	Rs.318.60	Rs.354.00
		3	படிவம்-3 தொழிற்சாலை (White Colour)	100 Forms	Rs.318.60	Rs.354.00
		4	படிவம்-4 சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்கள் (Light Green Colour)	100 Forms	Rs.318.60	Rs.354.00
		5	படிவம்-5 காலிமனை (Light Yellow Colour)	100 Forms	Rs.318.60	Rs.354.00
		6	வரிவிதிப்பு கணக்கீட்டு படிவம் (X&Y) (White Colour)	100 Forms	Rs.318.60	Rs.354.00
		மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் TamilNadu Multipurpose Indco Serve, Trichirappalli-8 நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0162/2022/அ1)				
	49	**பொருள்.16** புளியங்குடி நகராட்சியில் 2022 நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் தொடர்பாக நகராட்சிக்கு எதிராக திரு.திருமலைச்சாமி என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை வழக்கு எண்.W.P(MD)No.4086/2022-ன்படி புளியங்குடி நகராட்சி ஆணையாளரை எட்டாம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்கண்ட வழக்கில் புளியங்குடி நகராட்சி ஆணையாளர் சார்பாக திரு.M.ராஜராஜன், அரசு வழக்கறிஞர் சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் வழக்கு நடத்திடவும், வழக்கிற்கான வழக்கு கட்டணம் ரூ.10,000/- வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1174/2021/இ2)	அனுமதிக்கப் பட்டது.
	50	**பொருள்.17** திரு.K.சண்முகம், த/பெ.கருப்பணன், திண்டுக்கல் என்பவர் புளியங்குடி நகராட்சியில் புதிய ஒப்பந்தகாரராக பதிவு செய்து கொள்ளுமாறு 01.03.2022-ம் தேதி விண்ணப்பம் செய்துள்ளார். மேற்கண்ட விண்ணப்பத்தினை நகராட்சி பொறியாளர் பரிசீலனை செய்து 18.04.2022-ம் தேதி அறிக்கை சமர்ப்பித்துள்ளதன் அடிப்படையில் திரு.K.சண்முகம் என்பவரை ஐந்தாம் நிலை ஒப்பந்தகாரராக (2022-2023) ஆண்டில் பதிவு செய்து கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. **அலுவலக குறிப்பு** மேற்படி திரு.K.சண்முகம், த/பெ.கருப்பணன், திண்டுக்கல் என்பவ ஆம் ஆண்டு ஐந்தாம் நிலை ஒப்பந்தகாரராக பதிவு செய்ய மன்ற அனுமதிக்கலாம். (ந.க.எண்.240/2022/இ1)	அனுமதிக்கப் பட்டது.
	51	**பொருள்.18** திருமதி.பா.விஜயா, க/பெ.பாலசுப்பிரமணியன், இராஜபாளையம் என்பவர் புளியங்குடி நகராட்சியில் புதிய ஒப்பந்தகாரராக பதிவு செய்து கொள்ளுமாறு 01.03.2022-ம் தேதி விண்ணப்பம் செய்துள்ளார். மேற்கண்ட விண்ணப்பத்தினை நகராட்சி பொறியாளர் பரிசீலனை செய்து 18.04.2022-ம் தேதி அறிக்கை சமர்ப்பித்துள்ளதன் அடிப்படையில் திருமதி.பா.விஜயா என்பவரை ஐந்தாம் நிலை ஒப்பந்தகாரராக (2022-2023) ஆண்டில்	அனுமதிக்கப் பட்டது.

		பதிவு செய்து கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. **<u>அலுவலக குறிப்பு</u>** மேற்படி திருமதி.பா.விஜயா, க/பெ.பாலசுப்பிரமணியன், இராஜபா என்பவரை 2022-23 ஆம் ஆண்டு ஐந்தாம் நிலை ஒப்பந்தகாரராக செய்ய மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.207/2022/இ1)	
	52	**பொருள்.19** புளியங்குடி நகராட்சி பகுதியிலுள்ள RSKP டேங்க் மற்றும் GH டேங்க், S.S.டேங்க், சிந்தாமணி டேங்க், இந்திரா நகர் டேங்க் ஆகிய பகுதியில் உள்ள OHT டேங்கிலிருந்து குடிநீர் விநியோகத்திற்கு வால்வுகள் திறப்பதற்கு பணியாட்கள் இல்லாத காரணத்தினால் குடிநீர் சீராக வழங்க இயலாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி வால்வுகளை திறப்பதற்கு 7 எண்ணம் தனியார் ஒப்பந்தம் மூலம் பணியாளர்களை கொண்டு பணிசெய்யவும், அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.4,90,000/-யை குடிநீர் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **<u>அலுவலக குறிப்பு</u>**: மன்றம் அனுமதிக்கலாம்.	அனுமதிக்கப் பட்டது.
	53	**பொருள்.20** விளம்பரம் - புளியங்குடி நகராட்சி - இந்நகராட்சி பகுதிகளில் 2021-202 ஆம் ஆண்டு வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.தி.சதன்திருமலைக்குமார் பரிந்துரை செய்த பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாவட்ட அளவில் மாலைமுரசு நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கான விளம்பரக் கட்டணம் ரூ.10080/- பட்டியல் எண்.AD22230038/13.04.2022-ன்படி மாலைமுரசு தினசரி நாளிதழ் மூலம் வழங்கப்பட்டுள்ளது. எனவே தொகை ரூ.10080/- மாலைமுரசு (தமிழ் நாளிதழ்) 33, மதுரை ரோடு, திருநெல்வேலி என்ற நிறுவனத்துக்கு மன்ற அனுமதி பெற்று வழங்க அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்	அனுமதிக்கப் பட்டது.
	54	**பொருள்.21** இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட நகராட்சி துவக்கப்பள்ளி (மெயின் பஜார்) தென்னிந்திய செங்குந்தர் மகாசன சங்கத்திற்கு பாத்தியப்பட்ட அகஸ்தியர் கோவில் தெருவில் உள்ள வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. மேற்கண்ட பள்ளி இயங்கும் கட்டிடத்திற்கு மே 2021 முதல் ஏப்ரல் 2022 முடிய உள்ள காலத்திற்கான வாடகை ரூ.51,000/-யை (4250x12=51000) நகராட்சி கல்வி நிதியிலிருந்து தென்னிந்திய செங்குந்தர் மகாசன சங்கத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1089/2013/சி1)	அனுமதிக்கப் பட்டது.
	55	**பொருள்.22** புளியங்குடி நகராட்சிக்குட்பட்ட டி.என்.புதுக்குடி கிராமம், அய்யாபுரம் புஞ்சை சர்வே எண்.718/4, 718/5-ல் ஆல்பிரட் கருணாநிதி மற்றும் அற்புதமணி ஆகிய இருவரும் சேர்ந்து 10 செண்ட் நிலத்தை புளியங்குடி நகராட்சிக்கு நன்கொடையாக அளித்துள்ளனர். (ஆவண எண்.1565/19.05.022) என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. **அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.	அனுமதிக்கப் பட்டது.

	56	**பொருள்.23** புளியங்குடி நகராட்சி பகுதிகளில் தென்காசி சட்டமன்ற பேரவை குழுவின் மூலம் வரப்பெற்ற மனுவில் கோரியுள்ளபடியும், பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தப்படும் சாலையாக இருப்பதாலும் 2022-2023 ஆம் ஆண்டு பொதுநிதியின் கீழ் கீழ்க்கண்ட விபரப்படியான பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. வ. எண். | பணி விபரம 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24-ல் உள்ள மாடசா தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி 2 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27, 28-ல் உள்ள சிதப கோவில் தென்வடல் தெருவில் வாறுகால் அமைத்தல் **மொத்தம்** **அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.711/2022/இ1)**	அனுமதிக்கப் பட்டது.
	57	**பொருள்.24** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.5990/2022/SBM, நாள்.11.04.2022-ன்படி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் SBM திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட பணிகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. பணியின் விபரம் | மதி (இ கராட்சிக்குட்பட்ட வார்டு 15, வெள்ளூரணியில் சமுதாய கழிப்பிடம் தல் பணி கராட்சிக்குட்பட்ட வார்டு 1, கொக்கூரணியில் சமுதாய பிடம் கட்டுதல் பணி **அலுவலக குறிப்பு** : **1.** ய்மை பாரத இந்தியா திட்டம் 2021-22ன் கீழ் மேற்கண்ட பணிகளுக்கான மதிப்பீட்டு தொகைக்கு மன்றம் அனுமதிக்கலாம். **2.** ற்படி திட்டப்பணியின் அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.1030/2022/இ1)**	அனுமதிக்கப் பட்டது.
	58	**பொருள்.25** கீழமை நீதிமன்றங்களில் புளியங்குடி நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக சேர்த்து தொடரப்படும் வழக்குகளுக்கு புளியங்குடி நகராட்சி ஆணையாளர் சார்பாக வாதிடவும், வழக்கு நடத்திடவும், திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக 24.01.2022-ம் தேதிய மின்னஞ்சலில் இணைத்து வரப்பெற்ற பட்டியலில் திரு.R.குகன் (MS 2511/2010) வழக்கறிஞரை புளியங்குடி நகராட்சி வழக்கறிஞராக (Standing Council) நியமனம் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. கீழமை நீதிமன்றங்களில் நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக சேர்த்தும் தொடரப்படும் வழக்குகளில் நகராட்சி சார்பாக வாதிடவும், புளியங்குடி நகராட்சி சார்பாக வழக்கு தொடரவும் நகராட்சி வழக்கறிஞராக திரு.R.குகன் அரசு வழக்கறிஞரை நியமனம் செய்து கொள்ள	அனுமதிக்கப் பட்டது.

		மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.	
	59	**பொருள்.26** புளியங்குடி நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க தற்காலிக நோய்த்தடுப்பு பணியாளர்கள் மூலம் வீடு வீடாக கொசுப்புழு கண்டறிந்து அழித்தல், கொசுப்புழு மூலம் கண்டறிந்து அழித்தல் போன்ற பணிகளுடன் தகுதி பெற்ற மக்களுக்கு கொரோனா தடுப்பூசி போட நடவடிக்கை மேற்கொள்ளல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் தற்காலிக நோய்த்தடுப்பு பணியாளர்கள் நியமனம் 30.04.2022 உடன் முடிவடைகிறது. புளியங்குடி நகராட்சி பகுதிகளில் மொத்தம் 23985 வீடுகள் உள்ளன. டெங்கு காய்ச்சல் பரவுவதை தடுக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அறிவுரையின்படி 300 வீடுகளுக்கு ஒரு பணியாளர் வீதம் மொத்தம் 80 பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். எனவே 01.05.2022 முதல் 31.07.2022 வரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதத்தில் தற்காலிக அடிப்படையில் பணியமர்த்திக் கொள்ளவும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.23,00,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண்.0609/2022/எச்1)**	அனுமதிக்கப் பட்டது.
	60	**பொருள்.27** புளியங்குடி நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு JCB திடக்கழிவு மேலாண்மை பணி வாகனம் TN-79-U-9970-க்கு உதிரி பாகங்கள் பொருத்தி சரிசெய்யும் பணியை மேற்கொள்வதற்கு தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து 13.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று அது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. **வ. எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளியின் விலை விபரம் (ரூ.)** **1 | ஸ்ரீமுருகா மோட்டார் ஒர்க்ஸ், கொட்டாகுளம், செங்கோட்டை தாலுகா | ரூ.149716/-** **2 | மூஸா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், 194, செங்கோட்டை ரோடு, தென்காசி. | ரூ.153550/-** மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் உள்ள ஸ்ரீமுருகா மோட்டார் ஒர்க்ஸ், கொட்டாகுளம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதை மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.	அனுமதிக்கப் பட்டது.

நகர்மன்ற தலைவர்,
புளியங்குடி நகராட்சி.